உள்ளே...


# விழுமியம்

காலாண்டு சஞ்சிகை

**பிரதம ஆசிரியர்:**
அஷ்ஷெய்க்
எம்.எச்.எம். உஸைர் இஸ்லாஹி

**நிருவாக ஆசிரியர்:**
ஷரீப் சுலைமான்

**இணைப்பாளர்:**
எம்.எச்.எம். அஜ்மல்

**மலர்: 03 இதழ்: 01**
ஜனவரி - மார்ச் 2025
விலை: ரூ.200.00

**தயாரிப்பு:**
இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

**வெளியீடு:**
ஜஸ்ட் மீடியா பவுண்டேஷன்



இச்சஞ்சிகையில் வெளியாகும் ஆக்கங்களிலுள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவர்கள்.



03 முன்னாயத்தங்களை வேண்டி நிற்கும் ரமழான்
அஷ்ஷெய்க் அரபாத் கரீம்

07 பன்மைத்துவம்
அஷ்ஷெய்க் ஏ.ஜே.எம். ஷிஹான்

09 பரகத்தின் வாயில்களாக அமையும் ஆன்மிக பெறுமானங்கள்
அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மத்

14 தஃவாப் பணியும் ஷரீஆ அறிவுப் பின்னணியின் அவசியமும்
அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முயீத்

17 தேசிய மக்கள் சக்தியின் அதிகூடிய பெரும்பான்மை சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்குமா?
எம்.எச்.எம். ஹஸன்

19 அதிகரித்து வரும் நோய்களும் அதற்கான காரணங்களும்
டாக்டர் சுல்பி மரிக்கார்

22 உளப் பரிசுத்தம் அல்குர்ஆனிய அழைப்பு
அஷ்ஷெய்க் எஸ்.எம். அஸாஹிம்

25 மங்கிச் செல்லும் முஸ்லிம் அடையாளங்கள்: குதிரை மலையின் கதை
பேராசிரியர் எம்.எஸ்.எம் அனஸ்

30 ஞானமிக்க குழந்தை வளர்ப்பு - குர்ஆனிய சிந்தனைகள்
டாக்டர் றயீஸ் முஸ்தபா

35 ஆசிரியர்கள் உள்ளார்ந்த ரீதியாக தயார்படுத்தப்படுவது காலத்தின் தேவையாகும்
அமீர் மிஹ்ராஜ்

39 இலங்கை வாழ் இனத்துவ சமூகங்களிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதில் கல்வியின் வகிபங்கு
கலாநிதி பாலமயூரன் மாலினி

48 தனது மனைவியரை நேசித்த முஹம்மத் (ஸல்)
கலாநிதி கே. முஹம்மத்

50 சிரியா - புவியரசியல், உள்ளக முரண்பாடுகள் மற்றும் அரசியல் எதிர்காலம்
கலாநிதி ஸகி பவ்ஸ்



ISSN: 978-624-5143-01-6
DOP/NEWS/42/2024

**PUBLISHING AND DISTRIBUTION:**
Just Media Foundation
77, Sri Vajiragnana Mawatha,
Colombo - 00900 Sri Lanka
Mob/WhatsApp: 076 530 8509

**PRINTED AT:**
IPC Printing Press, Colombo

**EDITORIAL CONTACT:**
Sri Lanka Jama'athe Islami
77, Sri Vajiragnana Mawatha,
Colombo - 00900 Sri Lanka

**Tel:** +94112687091
**Fax:** +94112686030
**Email:** jipublishers@gmail.com

# சிரியா

## புவியரசியல், உள்ளக முரண்பாடுகள் மற்றும் அரசியல் எதிர்காலம்

**கலாநிதி ஸகி பவ்ஸ், PhD**
உதவிப் பேராசிரியர், அரசியல் விஞ்ஞானத் துறை
சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகம், மலேஷியா
zackyfouz@iium.edu.my



2010இல் டியுனீஷியாவில் தொடங்கிய அரபு வசந்தம் 2011வது ஆண்டு சிரியாவையும் அடைந்தது. அப்போது ஜனாதிபதி பஷ்ஷார் அல்-அஸாதின் சர்வாதிகார அரசாங்கத்திற்கு எதிராக அரசியல் சீர்திருத்தங்களைக் கோரி இலட்சக்கணக்கான மக்கள் வீதிக்கு இறங்கினார்கள். அஸாதின் இராணுவம் அதனைப் கடுமையாக ஒடுக்கியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இலட்சக் கணக்கானோர் அகதிகளாக மாற்றப்பட்டனர். மேலும், பல்லாயிரக் கணக்கானோர் சிறைகளில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்.

இதன் விளைவாக, இந்தப் போராட்டம் அஸாதிற்கும் புரட்சியாளர்களுக்கும் இடையிலான ஆயுதப் போராட்டமாகவும் சிவில் யுத்தமாகவும் வடிவம் பெற்றது. ஆனால், கடந்த ஐந்தாண்டுகளாக ரஷ்யா மற்றும் ஈரானின் உதவியுடன் ஆயுதக் குழுக்களை அஸாதின் படைகள் பாரியளவு கட்டுப்படுத்தி வந்தன. மக்கள் புரட்சி ஆதரவு ஆயுதக் குழுக்கள் மிகக் கடுமையாக பலவீனமடைந்துள்ளது போன்றதொரு தோற்றப்பாட்டை அது தந்தது. ஆனால், அவ்வாயுதக் குழுக்களினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு வாரகால சடுதியான எதிர்தாக்குதல்களை சமாளிக்க முடியாமல், அஸாத் ஆட்சி கவிழ்ந்துவிட்டது.

இந்த மக்கள் புரட்சியின் பின்புலம் மற்றும் அதன் சர்வதேச பரிமாணம் குறித்த பல்வேறு கேள்விகளும் புதிர்களும் எழுந்துள்ளன. அவற்றை சரியாகப் புரிந்து கொள்வதற்கு அஸாதின் ஆட்சி குறித்ததொரு வரலாற்றுப் பின்புலம் அவசியமாகிறது.

### சிரியாவில் அஸாத் குடும்ப ஆட்சி

தற்போது விரட்டியடிக்கப்பட்டுள்ள பஷ்ஷார் அல்-அஸாதின் தந்தை ஹாபிஸ் அல்-அஸாத் 1970இல் இராணுவத் தளபதியாக இருந்து, புரட்சியொன்றின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.



அத்தோடு, அவர் அரபுத் தேசிய வாதம், ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் இடதுசாரி பொருளாதாரக் கொள்கைகள் என்பவற்றின் கலவையான கொள்கைகளோடு நாட்டை அதுவரை ஆட்சி செய்து வந்த பாத் சோஸலிஸ கட்சியின் தலைமைத்துவத்தையும் கைப்பற்றினார். ஹாபிஸ் அல்-அஸாத் சிரியாவின் சனத்தொகையில் வெறும் 10 வீதமான (ஷீஆக்களின் ஒரு பிரிவான) அலவி சமூகத்தைச் சேர்ந்தவர். அதேவேளை, சிரியாவில் 70 சதவீதத்திற்கும் அதிமானவர்கள் அஹ்லுஸ் ஸுன்னாக்கள். எனவே, சிரியாவின் ஸுன்னிப் பெரும்பான்மைச் சமூகம் ஹாபிஸ் அல்-அஸாதின் ஆட்சியை சிறுபான்மைச் சமூகத்தின் ஆட்சி என்றே கருதியது. தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அரசியல், பொருளாதாரம் மற்றும் இராணுவம் என சகல மட்டங்களிலும் தனக்கு விசுவாசமான சிறுபான்மை அலவி சமூகப் பிரிவினரைக் கொண்டு நிரப்பினார் ஹாபிஸ் அல்-அஸாத். விளைவாக, அவரின் ஆட்சிக்கு எதிராக மக்கள் எதிர்ப்பு துளிர் விடும் போதெல்லாம், அதனை கடுமையாக அடக்கினார்.

## அஸாத்: ஏகாதிபத்திய எதிர்ப்பும் சர்வாதிகாரமும்

இந்நிலையில், 2000ஆம் ஆண்டு ஹாபிஸ் அல்-அஸாத் இயற்கை மரணம் அடைகிறார். அதனைத் தொடர்ந்து ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தபடி அவரது மகன் பஷ்ஷார் அல்-அஸாத் நாட்டினுடைய ஜனாதிபதியாக பதவி ஏற்கிறார். ஆனால், வெறும் பத்து வருடங்களில், அதாவது 2011ஆம் ஆண்டு பஷ்ஷார் அல்-அஸாதின் ஆட்சிக்கு எதிராக சிரிய மக்கள் வீதிக்கு இறங்கினார்கள். அரசியல் சீர்திருத்தம், ஜனநாயம் மற்றும் சுதந்திரம் என்பவை அவர்களுடைய சுலோகங்களாக இருந்தன. தந்தையைப் போன்றே மகனும் ஆர்ப்பாட்டக்காரர்களையும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளையும் கொடூரமாக அடக்கினார். தனக்கு எதிரான மக்களார்ப்பாட்டத்தை அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடைய கூட்டு சதியாக காட்சிப்படுத்தினார் அஸாத்.

இஸ்ரேலுக்கு எதிரான பலஸ்தீன விடுதலைக் குழுக்களுக்கு சிரியாவில் செயற்படுவதற்கான அனுமதியை அஸாத் வழங்கியது உண்மைதான். அதேபோன்று, அமெரிக்காவின் நலன்களுக்கு முரணாக ரஷ்யாவுடன் இணைந்து அஸாத் செயற்பட்டதும் உண்மைதான். ஆனால், அதே நேரம், ஹாபிஸ் அல்-அஸாத் மற்றும் பஷ்ஷார் அல்-அஸாத் இருவருமே தமது ஏகாதிபத்திய எதிர்ப்பை மக்களின் நியாயமான அரசியல் சீர்திருத்தங்களிற்கான கோரிக்கைகளை ஒடுக்குவதற்கும் அரச இயந்திரத்தை தமது குடும்ப மற்றும் நண்பர்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளையடிப்பதற்குமான உத்தியாகவுமே பயன்படுத்தியதும் உண்மைகளாகும்.

> அனைத்து அரசியல் சமன்பாடுகளுக்கு மத்தியிலும் ரஷ்யா மற்றும் ஈரானுடைய படைப்பலத்துடன் சிரியாவில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை நிலத்தை அஸாதின் படைகளே கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. ஆனால், அஸாதினுடைய இராணுவம் கடைசி இரண்டு வாரங்களில் திடீரென வீழ்ந்தது.

## சிரிய சிவில் யுத்தமும் பிராந்திய அரசியல் மோதலும்

ஆயுதப் போராட்டமாகவும் சிவில் யுத்தமாகவும் வடிவம் எடுத்த மக்கள் ஆர்ப்பாட்டம், பின்னர் பிராந்திய அரசியல் மோதலாக தளமாற்றமடைந்தது. முதலாவதாக, ஈரான் மற்றும் ஹிஸ்புல்லாஹ் அஸாதை பாதுகாப்பதற்காக வீரியத்தோடு களமிறங்கின. காரணம், ஈரானைப் பொறுத்தவரை, மத்திய கிழக்கில் தனது அதிகாரத்தை உத்தரவாதப் படுத்துவதற்கான மையமாக சிரியா காணப்பட்டது. லெபனான் ஹிஸ்புல்லாஹ்வையும் ஈராக் ஆயுதக் குழுக்களையும் ஈரானையும் இணைக்கும் பிரதான புள்ளி சிரியா. சிரியாவில் அஸாத் வீழ்வதென்பது ஈரானுடைய பிராந்திய அதிகாரம் இடிந்து விழுவதற்கு சமனானது.

மறுபுறம், ரஷ்யாவைப் பொறுத்தவரை முழு மத்திய கிழக்கிற்கும் ஒரேயொரு விமான மற்றும் கப்பற் படைத் தளம் சிரியாவில்தான் அமைந்துள்ளது. அஸாத் ஆட்சியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டால் அமெரிக்காவினுடைய இராணுவ முகாம்கள் நிறைந்த அகன்ற மத்திய கிழக்கில் தமக்கிருந்த ஒரேயோர் இராணுவ தளத்தையும் இழந்து விடக்கூடும் என்ற அச்சம் இந்த யுத்தத்தில் ரஷ்யாவை இழுத்து வந்தது.

## துருக்கியின் பங்கு

மறுபுறம், இந்த யுத்தத்தால் மில்லியன்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது துருக்கியில் வாழ்கிறார்கள். இது துருக்கியின் உள்நாட்டு அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தத் துவங்கியது. விளைவாக, தமது மக்களையே கொன்றொழிக்கும் அஸாதின் மிலேச்சத்தனமான இராணுவ நடவடிக்கைகளை கட்டுப்படுத்தாமல், அதிகரிக்கும் அகதிகள் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்றதொரு தீர்மானித்திற்கு துருக்கி வந்தது.

அதேநேரத்தில், நீண்ட காலமாக வட கிழக்கு சிரியாவில் (துருக்கியின் எல்லைப் பிராந்[illegible] சுயாட்சிக்காக போராடி வரும் குர்திய [illegible] குழுக்களும் (அவர்களும் ஸுன்னி மு[illegible] தமது சுயாட்சிக் கோரிக்கையை முன்[illegible]

சிவில் யுத்தத்தில் குதித்தன. துருக்கியில் வாழும் குர்தி இன மக்கள் துருக்கியிலிருந்தும் சுயாட்சி கோரி வருவதாலும் அவர்கள் சிரியாவிலுள்ள குர்திய குழுக்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதாலும் சிரியாவிலுள்ள குர்திய ஆயுதக் குழுக்களது எழுச்சியை துருக்கி தமது உள்ளக பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக நோக்கியது. எனவே, குர்திய ஆயுதக் குழுக்களை கட்டுப்படுத்தல் மற்றும் சிரிய அகதிகள் விவாகாரத்தை முகாமை செய்தல் போன்ற இரு பெரும் காரணிகளை மையப்படுத்தி வடக்கு சிரியாவில் தமது இராணுவ நகர்வுகளை ஆரம்பித்தது துருக்கி. இந்த நோக்கத்திற்காக பல ஆயுதக் குழுக்களுக்கும் தனது ஆதரவை வழங்கியது.

## அமெரிக்கத் தலையீடு

இவற்றுக்கு மத்தியில் சிரியப் பிரச்சினையினுடைய திசையை தீர்மானிப்பதில் தமது வகிபாகத்தை உத்தரவாதப்படுத்திக் கொள்ளும் வகையில் அமெரிக்காவும் களத்தில் குதித்தது. **2015**ஆம் ஆண்டளவில் குர்திகளை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிர வாதக் கும்பல்கள் தாக்கத் துவங்கியபோது, பயங்கர வாதத்திற்கு எதிரான போர் என்ற அடிப்படையில் அமெரிக்கப் படைகளும் குர்தியப் படைகளுடன் இணைந்து செயற்படத் தொடங்கின. குறிப்பாக, சிரியாவின் எண்ணெய் வளம் மிகு பிராந்தியங்களை அமெரிக்க தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டது. இவ்வாறு, சிரிய சிவில் யுத்தம் பிராந்திய மோதலாக பரிணாமம் அடைந்தது. இன்று இருபதிற்கும் மேற்பட்ட ஆயுதக் குழுக்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சிக்கலான நாடாக சிரியா மாறிப் போயுள்ளது.

## இஸ்ரேலின் காய்நகர்த்தல்

மிக சமீபத்தில் சிரிய விவகாரத்தில் நேரடியாகவே இஸ்ரேல் தலையிட ஆரம்பித்துள்ளது. இதுவரை காலமும் சிரியாவினுடைய உள்விவாகாரத்தில் பாரியளவில் இஸ்ரேல் தலையிட வில்லை. மாற்றமாக, சிரியாவில் ஜனநாயக மாற்றமொன்று வருவதைவிட அஸாதினுடைய ஆட்சியை இஸ்ரேல் பாதுகாப்பானதாகக் கருதியது. ஆனால், அஸாதினுடைய வீழ்ச்சிக்கு பின்னர் உருவாகியிருக்கும் அரசியல் ஸ்திரமின்மையினைப் பயன்படுத்தி தனது எல்லைகளை விரிவுபடுத்திக் கொள்ளும் நகர்வுகளை முடுக்கி விட்டிருக்கிறது இஸ்ரேல். சிரியாவில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றத்தை தமது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக காட்சிப்படுத்தி, புதிய மாற்றங்களை திசை திருப்பி விடுவதும் இஸ்ரேலினுடைய உள்நோக்கங்களாக இருக்கலாம் என அரசியல் நோக்கர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

## அஸாதின் இராணுவம் ஏன் வீழ்ந்தது?

மேற்சொன்ன அனைத்து அரசியல் சமன்பாடுகளுக்கு மத்தியிலும் ரஷ்யா மற்றும் ஈரானுடைய படைப் பலத்துடன் சிரியாவில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை நிலத்தை அஸாதின் படைகளே கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. ஆனால், அஸாதினுடைய இராணுவம் கடைசி இரண்டு வாரங்களில் திடீரென வீழ்ந்தது. மக்கள் புரட்சி ஆதரவு ஆயுதக் குழுக்களது தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் அவரது இராணுவம் ஒதுங்கிக் கொண்டது. அஸாதும் நாட்டை விட்டு தப்பியோட வேண்டிய நிலை எழுந்தது.

ஏன் இவ்வாறு நிகழ்ந்தது? என பலர் கேள்வி எழுப்புகிறார்கள். இஸ்ரேலுடனான போரில் ஹிஸ்புல்லாஹ்வும் ஈரான் ஆதரவு ஆயுதக் குழுக்களும் உக்ரைனில் ரஷ்யாவும் கடுமையான இழப்புகளை சந்தித்துள்ளதால், அவர்களால் தொடர்ந்து அஸாதின் இராணுவத்தை ஆதரித்து நிற்க முடியாத நிலை காரணமாகவே இராணுவம் தோல்வியைத் தழுவியதாக சிலர் எழுதிச் செல்கிறார்கள்.

அதேபோன்று, சிரியா இராணுவமும் தன்னளவில் பலவீமடைந்திருந்ததாக சொல்லப்படுகிறது. ஒரு தசாப்த்த கால போரினால் சிரியப் பொருளதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. இராணுவத்திற்கு சம்பளம் கொடுப்பதற்குக் கூட போதுமானளவு பொருளதார பலம் அரசிடம் இருக்கவில்லை. பல மாதங்களாக சம்பளம் பெறாமலேயே பல்லாயிரக்கணக்கான இராணுவ சிப்பாய்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். பலவந்த கட்டாய இராணுவ சேவையை சிரிய அரசு அமுல் செய்திருந்தது. எனவே, எந்தவோர் எதிர்த்தாக்குதலை எதிர்த்துப் போராடும் உளநிலையில் இராணுவம் இருக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலால், கடந்த மூன்று வருடகாலமாக போராட்டக் குழுக்கள் தமது வியூகங்களை வகுத்து வந்துள்ளன. சிதறியிருந்த ஆயுதக் குழுக்கள் ஒரே படையொழுங்கின் கீழ் வந்து, பாரம்பரிய அரச படைகளைப் போன் ... தைப் பெற்றன. இத்தகைய புதிய ... பெற்ற ஆயுதக் குழுக்களை முகம் கொ ... நிலையில் பலவீனமடைந்த சிரிய இரா ... வில்லை. இதுவும் அஸாதினுடைய ... தோல்விக்கு காரணமாக சொல்லப்படு ...